மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், மளிகைக் கடை முதல் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் வரைக்கும் கடன்கள் கொடுக்கிறோம் என்ற ஒரு நீண்ட பட்டியல் சொன்னார்கள். இப்படிப்பட்ட பணிகள் பிற மாநிலங்களில் நடைபெறுகிறதா? நம்முடைய மாநிலத்தில் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்காக கடன் கொடுப்பதாகச் சொன்னார்களே, எவ்வளவு பணம் கொடுக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்கு 3 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தப் பணம் கிடைக்காது.

மாயூரத்தை திருமயிலாடுதுறை எனப் பெயரிடுதல்

* 514 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்திற்கு அதன் பண்டைய தமிழ்ப் பெயரான திருமயிலாடுதுறை எனப் பெயரிடுவது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில் பெயர் மாற்றியமைக்க வேண்டுமென்று முன்பு தெரிவித்திருக்கிறார்கள். பண்டைய தமிழகத்தின் இலக்கிய வரலாறு படைத்த 'திருமயிலாடுதுறை' என்கிற பெயரைச் சூட்டுவதற்கு இனியேனும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'மாயூரம்' என்கிற பெயர் பழக்கப்பட்டுவிட்டதால், இந்தப் பெயரை மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அப்படியென்றால், பட்டணத்தில் 'கெல்லீஸ்' என்பதை 'கிள்ளியூர்' என்றும், 'ஹார்பார்' என்பதை 'சிதக்காதி நகர்' என்றும் மாற்றினீர்களே, கெல்லீஸ் என்பதும், ஹார்பார் என்பதும் பழக்கப்பட்ட பெயர்கள்தானே, அதை என் மாற்றினீர்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாயூரம் என்பது பழக்கமான பெயர். 'கெல்லீஸ்' என்பதும் 'ஹார்பார்' என்பதும் ஆங்கிலப் பெயர்களாக இருந்தது. அதைத் தமிழில் மாற்றியமைத்தோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில், 'மாயூரம்' என்பது வடமொழிச் சொல்லாக இருக்கிறது. பண்டைய இலக்கிய வரலாறு படைத்த

'திருமயிலாடுதுறை' என்ற பெயர் வைக்க வேண்டுமென்று உறுதி சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பெயரைச் சூட்டுவதற்கு இனிமேலாவது அரசு செயல்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 'மாயூரம்' என்ற பெயர் புகைவண்டி நிலையத்தில் மாற்றப்பட்டால்தான் பொருத்தமாக இருக்கும். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு எழுதி, அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டால் அப்படிச் செய்யலாம். இப்போது அங்கே எந்த மயிலும் ஆடிக்கொண்டிருக்கவில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு: தலைவர் அவர்களே, ஜாதியின் அடிப்படையில் இருக்கின்ற ஊர்களின் பெயர்களை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகளுக்கான நேரம் முடிவுறுவதால், வினாக்கள்-விடைகளுக்கான நேரத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

தமிழ் நாடு பால், பால் பொருள்கள் உற்பத்தி, விற்பனைச் சங்கம்.

* 515 **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) "தமிழ்நாடு மில்க் அண்ட் மில்க் ப்ராடக்ட்ஸ் மேனுபேக்சரர்ஸ் அண்ட் டீலர்ஸ் அசோசியேஷன், ஊத்துக்குளி" இடமிருந்து விற்பனை வரி குறித்து விண்ணப்பம் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) வெண்ணெய் எடுத்த பாலிலிருந்து தயாரிக்கப்படும் தயிருக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

மனித முடியை உரமாகப் பயன்படுத்தல்

* 516 **வினா—திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உரோமத்தை உரமாகப் பயன்படுத்தும் திட்டத்தை அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.